1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. மு. **கண்ணப்பன்:** (அ) & (இ) திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் திருக்கோயிலின் தங்கக் கலசம் திருடப்படவில்லை. ஆனல் மேற்படி கலசத்திலிருந்து சுமார் 360 கிராம் எடையுள்ள தங்கம் சுரண்டி திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுப்பற்றி காவல்துறையிடம் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

அமைச்சரவையிலிருந்து விளக்கம் கோரல்

திரு. கோவை செழியன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தங்கள் அனுமதியோடு ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வந்துள்ளேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களை ஒரு விளக்கம் கேட்டபொழுது, இரண்டு நாட்கள் கழித்துச் சொல்கிறேன் என்று சொன்னர்கள். நம்முடைய அமைச்சர் அவையிலே உள்ள மாண்புமிகு சத்தியவாணிமுத்து . . .

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. வேறு நேரத்தில் கேளுங்கள்.

திரு. கோவை செழியன்: நான் சொல்வதைக் கேளுங்களேன். எதிலே வருகிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. மற்றைய விதிமுறைகளைப் பாருங்கள் . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக இது சம்பந்தமாக என்று இங்கே வந்து சொல்லிவிட்டால் தலைவர் முடிவு எடுப்பதற்கு முன்னல் அதை அவையிலே எழுப்பியதாகிவிடும். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. நான் இப்படிக் கொடுத்திருக்கிறேன், என்ன ஆயிற்று என்று அவையிலே கேட்பதுகூட முறை அல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) சைதாப்பேட்டையில் ஆண்டொன்றுக்கு 7,000 டன்கள் நைட்ரிக் அமிலமும், 5,000 டன்கள் சோடியம் நைட்ரேட் அமிலமும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ மத்திய அரசு 1973-ம் ஆண்டு இசைவுக் கடிதம் ஒன்றை சென்னையில் உள்ள டாக்டர் முகுந்தா என்பவருக்கு வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை அம்பத்தூரில் நிறுவி வருகிருர்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இதிலே மத்திய அரசாங்கத்தின் பங்கு, மாநில அரசாங்கத்தின் பங்கு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு பப்ளிக் செக்டாரிலிருந்து, அல்லது கூட்டுறவு செக்டாரிலிருந்து ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா? அந்த முயற்சிக்கு அரசாங்கம் என்ன பதில் தந்தது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி எந்தத் தகவலும் என்னிடத்தில் இல்லை.

மன்னிப்பள்ளம் ஆனந்தத்தாண்டவபுரம் சாலை

*832 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தொகுதியில் மன்னிப்பள்ளத்திலிருந்து ஆனந்தத் தாண்டவபுரம் வரை கப்பிச்சாலை அமைக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இச்சாலையின் ஒரு பகுதி வேலைதான் துவக்கப்பட்டுள்ளது.

(இ) மன்னிப்பள்ளம்-ஆனந்தத்தாண்டவபுரம் சாலை மேம்பாடு வெள்ளப் பாதிப்பு, நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேத்தூர்-பொன்மாசநல்லூர் சாலையின் மொத்த நீளமான 3.8 கிலோ மீட்டரில் 1.6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை செப்பனிடப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. மீதமுள்ள 2.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையும் 2.8 கிலோ மீட்டர் நீளமுள்ள பொன்மாசநல்லூர் கிராம சாலையும் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.